# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1776/11 - 2012 සැප්තැම්බර් මස 18 වැනි අඟහරුවාදා - 2012.09.18

*1776/11 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 7/2009.*

**1980 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, ஒப்பனைச் சாதனங்கள், உபாயங்கள், அவுடதங்கள் சட்டம்**

*1984 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டம், 1987 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கச் சட்டம் மற்றும் 1993 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்கச் சட்டம் என்பவற்றால் திருத்தப்பட்டவாறானதும் இச்சட்டத்தின் 11 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படுவதுமான 1980 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, ஒப்பனைச் சாதனங்கள், உபாயங்கள், அவுடதங்கள் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் கீழ் சுகாதார அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி.*

*மைத்திரிபால சிறிசேன,*
*சுகாதார அமைச்சர்.*

கொழும்பு,
*2012, செத்தெம்பர் 11.*

**ஒழுங்குவிதிகள்**

*1992, யூலை 6 ஆந் திகதிய 722/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதியால் திருத்தப்பட்டவாறான 1985, திசெம்பர் 2 ஆம் திகதிய 378/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1984 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, அவுடதங்கள் ஒழுங்குவிதிகள் அவற்றின் 83 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப் பின்வரும் ஒழுங்குவிதியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன என்பதுடன், அவை 83 அ என்னும் ஒழுங்குவிதி என்றாற்போன்று பயனுறுதலும் வேண்டும் :-*

"83அ. (1) இலத்திரனியல் ஊடகத்தை அல்லது அச்சு ஊடகத்தைப் பயன்படுத்தி பொதியில் அல்லது உற்பத்திப்பொருளின் உட்புறத்தகவல் துண்டில் அச்சிடப்படுவதன் மூலமாக பொதுமக்களுக்கு -

(i) பரசெற்றாமோல் சிறப் தொடர்பில் செய்யப்படும் விளம்பரம் ஒவ்வொன்றும், "மிதமிஞ்சிய மருந்தளவு ஈரலுக்குத் தீங்கு விளைவிக்கலாம் ஆதலால், விதப்புரை செய்யப்பட்ட மருந்தளவையும் இடைவெளியையும் விஞ்ச வேண்டாம், காய்ச்சல் தொடர்ந்திருந்தால் உங்கள் மருந்துவரைக் கலந்தாலோசிக்கவும்," என்னும் கூற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ii) பரசெற்றாமோல் மாத்திரைகள் தொடர்பில் செய்யப்படும் விளம்பரம் ஒவ்வொன்றும், "மிதமிஞ்சிய மருந்தளவு ஈரலுக்குத் தீங்கு விளைவிக்கலாம் ஆதலால், விதப்புரை செய்யப்பட்ட மருந்தளவையும் இடைவெளியையும் விஞ்ச வேண்டாம். அறிகுறிகள் தொடர்ந்திருந்தால் உங்கள் மருத்துவரைக் கலந்தாலோசிக்கவும்," என்னும் கூற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) இந்த ஒழுங்குவிதி, அத்தகைய ஒழுங்குவிதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து இரண்டு மாதங்களைக் கொண்டவொரு காலப்பகுதி முடிவுறுவதன் மீது நடைமுறைக்குவருதல் வேண்டும்.".

*10- 220/1*

*ச.வ.பீ. 7/2009.*

**1980 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, ஒப்பனைச் சாதனங்கள், உபாயங்கள், அவுடதங்கள் சட்டம்**

*1990 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, ஒப்பனைச் சாதனங்கள், உபாயங்கள், அவுடதங்கள் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் கீழ் சுகாதார அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மைத்திரிபால சிறிசேன,
*சுகாதார அமைச்சர்.*

கொழும்பு,
*2012, செத்தெம்பர் 11.*

**ஒழுங்குவிதிகள்**

*1985, திசெம்பர் 2 ஆந் திகதிய 378/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1984 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, ஒப்பனைச் சாதனங்கள் ஒழுங்குவிதிகள் அவற்றின் 39 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப்பின்னர் ஒழுங்குவிதி 39அ எனப்பயனுற வேண்டிய பின்வரும் ஒழுங்குவிதியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன :-*

*"39அ. (1) ஆளெவரும் அதிகாரசபையின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி ஏதேனும் ஒப்பனைச் சாதனத்தை விளம்பரப்படுத்துதலாகாது.*

*(2) இந்த ஒழுங்குவிதி, அத்தகைய ஒழுங்குவிதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து இரண்டு மாதங்கள் காலப்பகுதியின் முடிவின் மீது நடைமுறைக்கு வருதல் வேண்டும்.".*

*10- 220/2*

---

*ச.வ.பீ. 7/2009.*

**1980 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, ஒப்பனைச் சாதனங்கள், உபாயங்கள், அவுடதங்கள் சட்டம்**

*1990 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க, ஒப்பனைச் சாதனங்கள், உபாயங்கள், அவுடதங்கள் சட்டத்தின் 38 ஆம் பிரிவின் கீழ் சுகாதார அமைச்சரால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

மைத்திரிபால சிறிசேன,
*சுகாதார அமைச்சர்.*

கொழும்பு,
*2012, செத்தெம்பர் 11.*

**ஒழுங்குவிதிகள்**

*1985, திசெம்பர் 2 ஆந் திகதிய 378/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 1984 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க, உபாயங்கள் ஒழுங்குவிதிகள் அவற்றின் 42 ஆம் ஒழுங்குவிதியை உடனடுத்துப்பின்னர் ஒழுங்குவிதி 42அ எனப்பயனுற வேண்டிய பின்வரும் ஒழுங்குவிதியை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றன :-*

*"42அ. (1) ஆளெவரும் அதிகாரசபையின் எழுத்திலான முன்னங்கீகாரமின்றி ஏதேனும் உபாயத்தை விளம்பரப்படுத்துதலாகாது.*

*(2) இந்த ஒழுங்குவிதி, அத்தகைய ஒழுங்குவிதி வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து இரண்டு மாதங்கள் காலப்பகுதியின் முடிவின் மீது நடைமுறைக்கு வருதல் வேண்டும்.".*

*10- 220/3*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.